பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

29 10 2025 WEDNESDAY 12 40 PM
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி, மும்பையில் நடைபெற்று வரும் இந்திய கடல்சார் வார விழாவில் இன்று உரையாற்றுகிறார்.

2. ஒரே பாரதம் - உன்னத பாரதம் என்ற வல்லபாய் பட்டேலின் தொலைநோக்கு பார்வையை நனவாக்கும் வகையில் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. Montha புயல் காரணமாக ஆந்திர மற்றும் ஒடிசா மாநிலங்களில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

4. காஸா பகுதியில் இஸ்ரேல் விமானப்படை நடத்திய தாக்குதலில் 33-க்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர்.

5. கனடா ஓப்பன் ஸ்குவாஷ் போட்டியில், இந்தியாவின் அனாகத் சிங் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மும்பையில் நடைபெற்று வரும் இந்திய கடல்சார் வார விழாவில் இன்று உரையாற்றுகிறார்.

உலகளாவிய கடல்சார் தலைமை செயலக அதிகாரிகளின் கூட்டத்திலும் பிரதமர் தலைமையேற்று பேசவுள்ளார்.

இந்த மாநாடு கடல்சார் துறையில் இந்தியா மேற்கொண்டு வரும் சீர்திருத்தங்களை எடுத்துரைப்பதாக அமையும் என்று முன்னதாக பிரதமர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று ரஃபேல் போர் விமானத்தில் பயணம் செய்தார்.

ஹரியானா மாநிலம், அம்பாலா விமானப்படைத் தளத்திலிருந்து சக்திவாய்ந்த போர்விமானமான இந்த ரஃபேல் விமானத்தில் அவர் இந்தப் பயணத்தை மேற்கொண்டார்.

முன்னதாக, குடியரசுத்தலைவருக்கு அம்பாலா விமானப்படை தளத்தில் ராணுவ அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

>>>>>><<<<<<

திருப்பூர் மாவட்டம், காங்கேயம், முத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் குடியரசுத் துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றார்.

முத்தூரில் உள்ள செல்லாண்டி அம்மன் கோவில், செல்வக்குமார சுவாமி கோவில் உள்ளிட்ட பல்வேறு கோவில்களில் அவர் சாமி தரிசனம் செய்தார்.

திருப்பூரில் நடைபெற்ற விழாவிலும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் பங்கேற்று பேசினார்.

>>>>>><<<<<<

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள இந்தியா - ஆசியான் பாதுகாப்புத்துறை அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்கிறார்.

பாதுகாப்பு அமைச்சகம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த கூட்டத்தில் ஆசியான் உறுப்பு நாடுகளின் அனைத்து பாதுகாப்புத்துறை அமைச்சர்களும் கலந்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் இந்தியா - ஆசியான் உறுப்பு நாடுகளுக்கு இடையேயான பாதுகாப்பு மற்றும் ராணுவ ஒத்துழைப்புகள் குறித்து முக்கியமாக விவாதிக்கப்படவுள்ளதாக தெரிகிறது.

>>>>>><<<<<<

ஒரே பாரதம் – உன்னத பாரதம் என்ற சர்தார் வல்லபாய் பட்டேலின் தொலைநோக்கு பார்வையை நனவாக்கும் வகையில் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக அமைச்சர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், வல்லபாய் பட்டேலின் 150-வது பிறந்த தினம் நாளை மறுநாள் கொண்டாடப்படுவதை முன்னிட்டு நடைபெறவுள்ள ஒற்றுமை ஓட்டத்தில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

>>>>>><<<<<<

சைப்ரஸ் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. *Constantinos Kombas* மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இன்று புதுதில்லி வந்தடைந்தார்.

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ் ஜெய்சங்கருடன் இணைந்து புதுதில்லியில் நடைபெறும் நிகழ்ச்சியில் அவர் கலந்துரையாடுகிறார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, கடந்த ஜூன் மாதம் சைப்ரஸ் நாட்டிற்கு சென்றிருந்தபோது, இந்தியா – ஐரோப்பிய யூனியன் இடையேயான உறவுகளை வலுப்படுத்துவதற்கான பேச்சுவார்த்தை நடத்தியதின் அடிப்படையில் திரு. Constantinos Kombas-ன் இந்திய வருகை முக்கியத்துவம் பெறுகிறது.

ஐரோப்பிய யூனியன் கவுன்சிலின் தலைமை பொறுப்பை சைப்ரஸ் நாடு அடுத்த ஆண்டு ஏற்கவுள்ளது குறிப்பிடத்தக்கது.

>>>>>><<<<<<

பீகார் சட்டப்பேரவைக்கு அடுத்த மாதம் *6* மற்றும் *11*ஆம் தேதி நடைபெறவுள்ள தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி தலைவர்களும், எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணித் தலைவர்களும் அம்மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

பிஜேபி மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திருமதி. அன்னபூர்னா தேவி, பாட்னாவில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

பீகார் மாநில மக்கள், பிரதமர் திரு. நரேந்திர மோடி, முதலமைச்சர் திரு. நிதிஷ் குமார் தலைமையிலான கூட்டணிக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என்று அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட, ராஷ்ட்ரிய ஜனதா தள் தலைவர் திரு. தேஜஸ்வி யாதவ், எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி ஆட்சிக்கு வந்தால், தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற பாடுபடும் என்று உறுதியளித்தார்.

>>>>>><<<<<<

*Montha* புயல் காரணமாக ஆந்திர மற்றும் ஒடிசா மாநிலங்களில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

ஆந்திர மாநிலம், Srikakulam, விஜயநகரம். விசாகப்பட்டினம், நெல்லூர், காக்கிநாடா மாவட்டங்களில் புயல் காரணமாக, பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

இம்மாநிலத்தில் 38 ஆயிரம் ஹெக்டேர் விளைநிலைங்களும், ஒரு லட்சத்து 38 ஆயிரம் ஹெக்டரில் பயிரிடப்பட்ட தோட்டப் பயிர்களும் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

76 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

3 ஆயிரம் நிவாரண முகாம்களையும், 200 மருத்துவ முகாம்களையும் அம்மாநில அரசு அமைத்துள்ளது.

முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு தலைமையில், அரசு அலுவலர்கள் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

Montha புயல் காரணமாக, ஒடிசா மாநிலத்தின் கஜபதி, Ganjam மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் மரங்கள் வேரோடு சாய்ந்துள்ளதாகவும், சாலைகள் சேதமைடைந்துள்ளதாகவும். மண்சரிவு ஏற்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

நிவாரணப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக ஒடிசா முதலமைச்சர் திரு. மோகன் சரண் மாஜி தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

எல்லைப்பகுதியில் உள்ள அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காண இந்தியாவும் சீனாவும் ஒருங்கிணைந்து செயல்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, வெளியுறவுத்துறை அமைச்சகம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், Chushul – Moldo எல்லைப்பகுதியில் இருநாட்டு கமாண்டர்கள் பங்கேற்ற கூட்டத்தில் இவ்வாறு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

வட இந்தியாவில் கொண்டாடப்படும், Chhathh பண்டிகையை முடித்துவிட்டு, அவரவர் பணிபுரியும் இடங்களுக்கு திரும்புவதற்கு வசதியாக 12 ஆயிரம் சிறப்பு ரயில்கள் இயக்கப்படுவதாக ரயில்வே அறிவித்துள்ளது.

பயணிகளின் வசதிக்காக, புதுதில்லி மற்றும் பீகார் மாநிலத்தின் பல்வேறு ரயில் நிலைங்களில், அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகவும், இதற்காக 12 லட்சத்திற்கும் மேற்பட்ட ரயில்வே ஊழியர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

காஸா பகுதியில் இஸ்ரேல் விமானப்படை நடத்திய தாக்குதலில் 33-க்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர்.

ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல் ராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தியதற்கு பதிலடியாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் திரு. Israel Kutz தெரிவித்துள்ளார்.

காஸா பகுதியில் ராணுவ நடவடிக்கையை எடுக்க இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெஞ்சமின் நேத்தன்யாஹூ உத்தரவிட்டதன் பேரில், விமானப்படை இந்த தாக்குதலை நடத்தியுள்ளது.

இஸ்ரேலின் இந்த நடவடிக்கை, போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறுவதாக அமைந்துள்ளது என்று ஹமாஸ் அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

>>>>>><<<<<<

கனடா ஓப்பன் ஸ்குவாஷ் போட்டியில், இந்தியாவின் அனாகத் சிங் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 12-10, 11-9, 11-9 என்ற செட்கணக்கில் பெல்ஜியத்தின் Tanne Gilis-ஐ வென்றார்.

>>>>>><<<<<<

சீனாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Prajwal Dev காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர். 6-2, 7-6 என்ற செட்கணக்கில் சீனாவின் Sheng Tang-ஐ வென்றார்.

>>>>>><<<<<<

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான முதலாவது ட்வென்ட்டி ட்வென்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

கேன்பராவில் இப்போட்டி பிற்பகல் மணி 1.45க்கு தொடங்குகிறது.

-------------

கனடாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Aditya Vishal – பிரான்ஸின் Dalmasso இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-4, 7-5 என்ற செட்கணக்கில் கோஸ்ட்டாரிக்காவின் Jesse Flores – அமெரிக்காவின் William Grant இணையை வென்றது.

>>>>>><<<<<<

பஹ்ரைனில் நடைபெற்று வரும் ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா ஒரு தங்கம். ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

மகளிர் மல்யுத்தப் போட்டியின் 61 கிலோ எடைப்பிரிவில் Yashita தங்கப்பதக்கத்தை கைப்பற்றினார்.

ஆடவர் குத்துச்சண்டை 66 கிலோ எடைப்பிரிவில் ஆனந்த் தேஷ்முக் வெண்கலப்பதக்கம் வென்றார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 4 தங்கம், 10 வெள்ளி, 13 வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

>>>>>><<<<<<

ஜெர்மனியில் நடைபெற்று வரும் Hylo ஓபன் பேட்மிண்டன் போட்டியின் முதல் சுற்று ஆட்டத்தில், இந்தியாவின் எஸ்.எம். சுப்பிரமணியன் இன்று மலேசியாவின் J.H. Leong-ஐ எதிர்கொள்கிறார்.

>>>>>><<<<<<